முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.02.2026) அன்று துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் சார்பில் ரூ. 27.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திருமதி பர்வீஸ், தலைமை பொறியாளர் ராதாகிருஷ்ணன், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், எம்.இசட். ஆசாத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துறைமுகம் தொகுதி – பிராட்வே – டேவிட்சன் தெருவில்

15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட - கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டி!

அமைச்சர் கே.என்.நேரு – பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச்.1- நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ரூ.27.50 கோடி மதிப்பீட்டில், சென்னை குடிநீர் வாரியத் தின் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் அமைக்கப்பட்டுள்ள 30 இலட்சம் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க த் தொட்டிகளில் முதற்கட்டமாக 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்க த்தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின் படி, (27.02.2026) அன்று நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் ரூ.27.50 கோடி மதிப்பீட்டில், சென்னை குடிநீர் வாரியத் தின் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் அமைக்கப்பட்டுள்ள 30 இலட்சம் கொள்ளளவு கொண்ட நீர் தேக்கத் தொட்டிகளில் முதற்கட்டமாக 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்கத்தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்கள்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக சுமார் 1.141 மீட்டர் நீளத்திற்கு 400 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 1 கீழ்நிலை தொட்டி மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை தொட்டிகள், சுமார் 963 மீட்டர் நீளத்திற்கு 300 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது நிர்ணயி க்கப்பட்ட காலஅளவுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்படும். இதன் மூலம், வார்டு60, 56 உள்ள மண்ணடி, கிளைவ் பேட்டரி, ஜார்ஜ் டவுன் ஆகிய பகுதிகளில் உள்ள 70,000 பொது மக்கள் பயன் பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திருமதி உ.பர்வீஸ், தலைமைப் பொறியாளர் ஏ.ராதாகிருஷ்ணன், பகுதி பொறியாளர் எம்.எஸ்.ஆனந்த் குமார், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.வெ.பரிமளம், இசட் ஆசாத் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கவுல்பஜார் ஊராட்சியில் ரூ.33 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துவக்கப் பள்ளியையும், ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாயவிலைக் கடை கட்டிடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மனோகரன், ஊராட்சி மன்றத் தலைவர் அனிதா இளங்கோவன், வனஜா, துணைத் தலைவர்கள் மோகன், ஜோசப் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

எஸ்.சேகர் எம்.சி. தலைமையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

பெருங்களத்தூர் தெற்குப் பகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு - மாபெரும் பொதுக்கூட்டம் !

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – சே.மெ.மதிவதனி சிறப்புரை!

தாம்பரம், மார்ச்.1 காஞ்சி வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் மார்ச் 1இல் பிறந்தநாள் காணும் கழகத் தலைவர், முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று 1.3.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கும் விழா மற்றும் மாலை 6.00 மணியளவில் மாபெரும் பொதுக்கூட்டம் பேரறிஞர் அண்ணா பாலம் அருகில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற தி.மு.க. குழு தலைவர் எஸ்.சேகர் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

பி.புகழேந்தி எம்.சி., வ.க.ரவிச்சந்திரன், கே.சாமுண்டீஸ்வரி, எஸ். கமலா சேகர் எம்.சி., எஸ். மதுமிதா மதன் எம்.சி., எஸ். ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., எஸ்.ஹேமாவதி சேகர் எம்.சி., டி.ஜெபதுரை, ஜே.குப்புசாமி, எஸ்.சிவக்குமார், வி.யோபு, ஆர்.ஓம்பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் க. குருநாதன், கே.வெங்கடேசன், ஆர்.சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன், டி.கே.கோட்டி, டிப்பர் ரவி, வி.நடராஜன், ஆர். பரஞ்சோதி, எம். துளசிராமன், எஸ்.பி.செந்தில்நாதன், ஆர்.நேரு, என். கண்ணன், எஸ்.சோமசுந்தரம், ஆர்.ரேமன், ஏ.நந்தகுமார், ஆர்.கதிரவன், ஏ.குமரன், தா. மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு கழகக் கொடி ஏற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், டி.காமராஜ் எம்.சி., எஸ்.இந்திரன் எம்.சி., ஆதிமாறன், லயன் ஆர்.எஸ்.சங்கர், இரா.ரத்தினகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர். இவ்விழாவில் பொன். சதாசிவம், எஸ்.ஜி.கருணாகரன், எம்.ராமமூர்த்தி, விக்கி (எ) விக்னேஸ்வரன், மங்களபுரம் எம்.பாபு, இ.ரமேஷ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தளபதி ஆட்டோ சங்க ஓட்டுநர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக எஸ்.ஐசக், ஜே.மணிவண்ணன், கே.சுந்தர், பி.சுரேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

'திராவிட மாடல்' முதல்வரின் பிறந்த நாள் விழா!

மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, மார்ச் 1- தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் பணியாளர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழக தொ.மு.ச. சார்பாக நடைபெறுகிறது.

மார்ச் 1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய திராவிட மாடல் முதலமைச் சர் அவர்களின் பிறந்த நாள்

நிகழ்ச்சி மார்ச் 2ம் தேதி திங்கட் கிழமை தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமைச்சங்க அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 பேர்கள் மற்றும் ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்படுகிறது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மக்களுக்கு என்னிலடங்கா சலுகைகள் வழங்கி அவர்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாள் சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் கொண்டாட வேண்டும் என்று மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பா.ஜானி தலைமை! கூ.பீ.ஜெயின் எம்.சி. முன்னிலை! கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

வில்லிவாக்கம் 95 (அ) வட்டத்தில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச். 01 சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 95 வது (அ) வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 73வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (01.03.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணி அளவில், 95 வது (அ) வட்டக் கழக அலுவலகத்தில் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு 95 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.ஜானி தலைமை தாங்குகிறார்.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர், 8 வது மண்டலக்குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், 95 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுதாதீனதயாளன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்குத் தலைவர் ப.ரங்கநாதன், தொகுதிப் பார்வையாளர் ஓ.எ.நாக லிங்கம், பொதுக் குழு உறுப்பினர் சாவித்திரி வீரராகவன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.ஜெ.பிரபு, பகுதி நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து. ராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைசெல்வி, மு.சுரேஷ் பாபு, பா.தே.தீனதயாளன், டி.எம்.பாஸ்கரன், சாந்தி பில்லி, வெ.ராஜேஷ், மு. கிருஷ்ணவேணி, ஆர்.வெற்றிசெல்வன், ஆர்.லட்சுமி, பி.கோமதி, பி.சசிகலா, ஆர். செல்வி, இ.காளியம்மாள், இ.திருவேங்கடம், ஆர். உமா சங்கர், வி.அன்பரசு, எம்.யமுனாதேவி, வி.எஸ். ஆறுமுகம், வி.கண்ணன், எஸ்.சரவணன், பா.பாஸ்கர், எஸ்.சஞ்சய், வி.பத்மப்ரியா, தூ.கார்த்திக், வட்டக் கழக நிர்வாகிகள் பி.மணி, டி.எஸ்.முருகன், ஏ.நிர்மலா, கோ.ராஜேஷ், ச.இளங்கோவன், கே.பால்மணி, வி. வினோத்குமார், எம்.ஜெ. சத்யா, பெ.மோகன்ராஜ், பி.மணிமாறன் எஸ்.கோகுலேஷ், பா.யுவராஜ், கோ. மனோஜ் குமார், அ.பழனிவேல், மு.காட்வின், டி. நவீன், எம்.பிரவீன் மற்றும் பாக முகவர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இறுதியாக வட்ட துணைச் செயலாளர் கேபிள் தே.பழனி நன்றி கூறுகிறார்.

தண்டையார்பேட்டை – இராயபுரம் மண்டலங்களில்

ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

மேயர் பிரியா பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச்1- பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இரவு பாடசாலை மற்றும் திறன் மேம்பாட்டு மையம், குழந்தைகள் மையக் கட்டடம், பல்நோக்கு மையக் கட்டடம் என மொத்தம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளைப் ட்பயன்பாட்டிற்கு மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (27.02.2026) திறந்து வைத்தார்.

மேயர் , பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட சத்திய வாணி முத்து நகர், பாடசாலை தெருவில் மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இரவு பாடசாலை மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதனால் பெரம்பூர், வியாசர்பாடி, சத்தியவாணி முத்து நகர், காமராஜர் நகர், கக்கன்ஜி காலனி, பெரியார் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைவர்.

இதனைத் தொடர்ந்து, கருணாநிதி சாலை 2வது தெருவில் மூலதன நிதியின் கீழ் ரூ.46.50 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் மையக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதனால் கருணாநிதி நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பயனடைவர்.

பின்னர், பெரியார் நகர், ராணி அம்மையார் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் மையக் கட்டடம்-1 மற்றும் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாய விலைக் கடை மற்றும் குழந்தைகள் மையக் கட்டடம்-2 ஆகியவற்றை திறந்து வைத்து, குழந்தைகளுக்கு தட்டு மற்றும் டம்ளர்களை வழங்கினார். இதனால் பெரியார் நகர், ராணி அம்மையார் தெரு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்தவர்கள் பயனடைவர்.

தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட பெரியபாளையத்தம்மன் கோயில் தெருவில் ரூ.8.30 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (வரி விதிப்பு (ம) நிதி) திருமதி சர் பஜெயாதாஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி பா. வேளாங்கண்ணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள விஜயநகர் பேருந்து நிலையத்தில் இருந்து ஐஐடி கேட் வரை உள்ள வேளச்சேரி பிரதான சாலை நடைபாதை அமைக்கும் பணி 2.4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.1 கோடி 66 லட்சம் மதிப்பீட்டில் துவக்கி வைக்கப்பட்டது. வார்டு மாமன்ற உறுப்பினர் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சி உயர் அதிகாரிகள், ஒப்பந்தாரர்கள், மாநகராட்சி சாலை பணி ஊழியர்கள், கழக நிர்வாகிகள் பெருதிரளராக பங்கேற்றனர்.

ரமணி மாதவன் எம்.சி. முன்னிலையில் கழகத் தலைவர் பிறந்தநாள்!

மதுரவாயல் 147 வது வட்ட தி.மு.க. சார்பில் அறுசுவை உணவு விளையாட்டு போட்டிகள்!

நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. துவக்கி வைக்கிறார்! எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, மார்ச். 01 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி இன்று 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை, காலை 7:00 மணிக்கு, ஆலப்பாக்கம், நார்ச்சந்தியில் மாவட்டப் பிரதிநிதி ஆலப்பாக்கம் பிருந்தாவனன் ஏற்பாட்டிலும்,

காலை 7.30 மணிக்கு அஷ்ட லட்சுமி நகர், போலீஸ் பூத் அருகில் மாவட்டப் பிரதிநிதி ஜெய முருகன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பி.கோபிநாத், இலக்கிய அணி புரவலர் எல்.ஐ.சி. தியாகராஜன், பாலசுப்பிரமணியன் ஏற்பாட்டிலும்,

காலை 8.00 மணிக்கு, திடீர் நகர் பெருமாள் கோவில் அருகில் துணை வட்டச் செயலாளர் ஜி.பி. ஆனந்தகுமார் ஏற்பாட்டிலும்,

காலை 8.30 மணிக்கு, மேட்டுக்குப்பம், காந்தி தெரு சந்திப்பில் பகுதி சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஏ.ஜெகன் ஏற்பாட்டிலும்,

காலை 9.00 மணிக்கு, பகுதி மாணவர் அணி அமைப்பாளர் எஸ். ஜி.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் முன்னிலையில் 11 வது மண்டலக் குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன் கழகக் கொடியேற்றி இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவினை பொது மக்களுக்கு வழங்க உள்ளார்.

மேற்கண்ட நிகழ்வினை தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு, மேட்டுக்குப்பம் பிள்ளையார் கோவில் தெருவில் பொது மக்களுக்கு விளையாட்டு போட்டி மற்றும் கோலம் வரையும் போட்டிகள் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை பகுதி அமைப்பாளர் வி.வெங்கடேசன் ஏற்பாட்டில் நடைபெற உள்ளதால் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினரும், பொதுமக்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி. மாதவன் தெரிவித்துள்ளார்.